86—

திண்டுக்கல் –கடவூருக்குப் பேருந்து இயக்குதல்

***37292** திரு. எச்.எம். ராஜு:

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா —

திண்டுக்கல், வேடச்சந்தூர், மருங்காபுரி தொகுதிகளை இணைக்கும்படி திண்டுக்கல்லில் இருந்து கடவூருக்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திண்டுக்கல்லிலிருந்து கடவூருக்கு ராணிமங்கம்மாள் போக்குவரத்துக் கழகப் பேருந்து மூலமாகவும் தனியார் பேருந்து மூலமாகவும் பயணிகளின் தேவைக்கு ஏற்ப 12 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன.

திரு. எச்.எம். ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல், வேடசந்தூர், மருங்காபுரி தொகுதிகளை இணைக்கும் வேடசந்தூர் கடவூர் தடம் மிகவும் முக்கியமான தடமாக இருப்பதாலும், மக்கள் அதிக அளவில் பயணம் செய்வதாலும், தனியார் துறையில் பேருந்துகள் முதலில் இயங்கிக் கொண்டிருந்தபோது மக்கள் பேருந்துகளின் கூறைகளின் மேல் பயணம் செய்து கொண்டிருந்ததால், மாண்புமிகு அமைச்சரவர்களை உடனடியாக அணுகி, மக்கள் இந்த மாதிரி தனியார் பேருந்துகளில் கூறையில் பயணம் செய்கிறார்கள், எனவே தயவு செய்து ஆர்.எம்.டி.சி. மூலமாகப் பேருந்துகள் விட வேண்டுமென்று கேட்டதற்கிணங்க, உடனடியாக அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். அதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், தமிழக அரசுக்கும் நல்வாழ்த்துக்களைச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதேசமயம் சோழன் போக்குவரத்துக் கழகம் மூலம் எதிர்திசையில் சில நடைகளும் அந்தத் தடத்தில் இப்போது இயக்கப்படும் 12 நடைகள் என்பது குறைவாக இருப்பதால், மேலும் 6 நடைகள் அதிகப்படுத்தித்தர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அரசில் எல்லோரும் எல்லாமும் பெற வேண்டுமென்ற

அடிப்படையில், இந்த அரசு திட்டங்களைச் செயலாக்கிக் கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய உணர்வை மனதிலே கொண்டு, 6 நடைகள் கூடுதலாக வேண்டுமென்று அவர்கள் கேட்டார்கள்—மேலும் 2 நடைகள் கூடுதலாக்கி மொத்தம் 14 நடைகள் இயக்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

திரு. எச்.எம். ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுக்கு மீண்டும் நல்வாழ்த்துக்களைக் கூறிக்கொண்டு, தமிழ்நாட்டில் பேருந்துகளில் கூறைகளின் மேல் பயணம் செய்யும்போது, அந்தப் பேருந்து உரிமையாளர்களின் மீது அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைப்போல இருக்கிறதென்று இடத்தைக் குறிப்பிட்டு காட்டினால், உடனடியாக இந்த அரசு கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்.

மாண்புமிகு திரு. ச. காந்திராஜன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திண்டுக்கல் கடலூர் சாலையில் கூடுதலாகப் பேருந்துகள் இயக்க மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே ஒரு கேள்வியைப் போட்டிருக்கிறார்கள். ஏற்கெனவே அவர் அந்தப் பகுதியில் பாராளுமன்றத் தேர்தலின்போது பொறுப்பேற்றிருந்த காரணத்தால், அந்தக் கேள்வியை அப்போது போட்டிருக்கிறார்கள். ஆனால் தேர்தலுக்குப் பின்பாக மக்களுடைய கோரிக்கைகளை ஏற்று, இது வரையில் எல்லா வசதிகளையும் செய்து முடித்துக் கொடுத்திருக்கின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியிலே வேடசந்தூர் தொகுதியைப் பொறுத்தவரையில் 14 புதிய வழித் தடங்களில் பேருந்துகளை மாண்புமிகு அமைச்சரவர்கள் துவக்கி, இதுவரையில் வேடசந்தூர் தொகுதி பெறாத அத்துணை சாதனைகளையும் அங்கே நிகழ்த்திக் காட்டியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வகையில் கூடுதலாக பேருந்துகள் இராணி மங்கம்மாள் போக்குவரத்துக் கழகத்தின் மூலமாக விட்டு, சரி செய்யப்பட்டாலும், இன்னும் கூடுதலாக 2 நடைகள் வேண்டுமென்று சொல்லி, என்னிடத்திலேயும் பொதுமக்கள் மனு கொடுத்தார்கள். நம்முடைய போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களிடத்திலே அந்த மனுவைக் கொடுத்த பிறகு, அவர்கள் அதற்கான நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள்.

அந்தச் சாலையில் 2 கிலோ மீட்டர் சரியில்லாத காரணத்தால், சமீபத்தில் வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்ட காரணத்தாலே, அந்தச் சாலையைப் போட்டவுடன் பேருந்துகளை விடுவதாக, ஆர்.எம்.டி.சி. நிர்வாகம் கூறியது. அதனுடைய அடிப்படையில் இப்போது பொதுப்பணித்துறையும் அந்தச் சாலைகளைச் செப்பனிடுவதற்காக டெண்டர்களை விட்டு, வேலைகளும் நடந்து கொண்டு இருக்கின்றன. அந்த வேலைகள் முடிந்தவுடனேயே அந்தப் போக்குவரத்து விடப்படும் என்றாலும்கூட, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்போது இந்த உறுதியை அளித்திருக்கிறார்கள். அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்து, இன்னும் கூடுதலாக இரண்டு நடைகளை விரைவிலே விடுவதற்கும், அதற்கு மேலும் கடவூருக்கு அடுத்து இன்னும் பத்து கிலோ மீட்டர் செல்லவேண்டுமென்று அந்தப் பகுதி மக்கள் கேட்பதால், அதனையும் நீட்டித்துத் தர ஆவன செய்வார்களா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-35

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை, மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அரசில் திங்கள்கிழமையே அமல்படுத்தப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 87, திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.

87—

ஏழுவனம்பட்டி கண்மாய்க்கு தண்ணீர் நிரப்புதல்

***19590**—திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா —

பெரியகுளம் தொகுதி, தேவதானப்பட்டி அருகில் நிலக்கோட்டைத் தொகுதி, ஏழுவனம்பட்டிக்கு மேல்புறம் மஞ்சளாறு ராஜ வாய்க்காலில் வரும் தண்ணீரை ஒரு வாய்க்கால் வெட்டி, ஏழுவனம்பட்டி கண்மாயில் நிரப்ப அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,